**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 59** **நாள்: 26.01.2026**

**குடியரசு தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை இன்று ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (26.01.2026) குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முறையாக சொத்துவரியினை உரிய காலங்களில் தாமதமில்லாமல் செலுத்தியவர்கள் மற்றும் அதிக சொத்துவரி செலுத்தியவர்களை கௌரவிக்கும் வகையில் சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

மேலும், 2024-25ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டப்பணிகளில் மாவட்ட அளவில் சிறந்த சேவை வழங்கிய மருத்துவம் சார்ந்த அலுவலர்களைப் பாராட்டி விருதுகளையும், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள திருமண மண்டபத்தின் சிறந்த கட்டடக் கலைக்காக நிர்வாக இயக்குநர் திருமதி அமுதா கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 172 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டிச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களையும், அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற சென்னை மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.த.விசுவநாதன் (கல்வி), திரு.தா.இளையஅருணா (நகரமைப்பு), மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**